சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு (1889-ம் ஆவணி மீ 28-ம் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

புத் 94 ] யாழ்ப்பாணம்:- ருதிரோற்காரி ஞு கார்த்திகை மீ 2, 9, 16, 23-12-83 வெள்ளிக்கிழமை [இல -26

JAFFNA, SRI LANKA
RECEIVED
1984

ஏகாதிபத்திய இறுமாப்பை எதிர்த்து ஏற்ற நீதி எமக்கெடுத்த இராமநாத வள்ளல்

## சமூகத்தலைமைக்குச்சம்பூரணதகைமைகொண்டசால்பாளன்

"கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ? என்று சொல்லுவார்களே. அந்தப் பழமொழியைச் சிந்திக்க வைத்த சீமான் திருவாளன் பொன். இராமநாதன் இந் நாட்டிலே இருஞ்சுடராய் எழுத்து சமய, இலக்கிய, இலக்கண ஒளி பரப்பிய குரவர் நாவலர் அவர்கள் நற்கதியடைந்த பின் அந்த இடத்தில் நின்று தொடர்ந்து அவர் பணியை நீட்டித் தொண்டாற்றிய சீலன் ஸ்ரீ பொன். இராமநாதன், இந்த இரு சுடர்கள் விட்டுச் சென்ற பரோபகாரப் பணியாம் ஒளியை அநுபவிக்க இந்நாட்டு மக்கள் தவறிவிட்டார்களே என்று கவலைகொள்ளவேண்டிவ காலம் இப்பொழுது நிகழ்கின்றது: இதன் மர்மம் என்ன?

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் முப்பெரும் பணிகள்

[ ப. கணேசலிங்கம்
யாழ். இந்துக் கல்லூரி பல்கலைக்கழக புகுமுக வகுப்பு ]

( முன் வளர்ச்சி — 2 )

ஈழத்திலே மிகவும் பழமையானதும் பிரசித்தி பெற்றதுமான திருக்கேதீச்சரம், கீரிமலைச் சிவன்கோவில் ஆகிய ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென 1872இல் வற்புறுத்திவந்ததன் பயனாக இவை இன்று முற்றுப் பெற்று விளங்குகின்றன. அத்தோடு நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை ஆகம முறைப்படி கட்டவேண்டுமெனக் குரல் கொடுத்தார். இதற்கு அக்காலத்திலே இருந்த அதிகாரியின் ஒத்துழைப்புடன் இந்தியாவிலிருந்து கருங்கற்கள் பெற்றுக் கொடுத்தார். இவை இன்று பயன்படுத்தாத வண்ணமாக கோயில் வீதியில் போடப்பட்டிருக்கின்றன.

சைவவாழ்வு எதுவென ஆறுமுகநாவலர் எடுத்துக் காட்டியதன் பயனாக. கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த பலர் மீண்டும் சைவராயினர், சைவசமயிகளுக்கு அடுக்காத செயல்களாகிய மது மாமிச போசனம் செய்தவர்கள் பலர் அவற்றை விட்டு சைவ வாழ்வினை மேற்கொண்டனர். சைவசமய ஆசாரங்களைக் கேலி பண்ணித் திரிந்தோர், அவற்றின் உண்மையை உணர்ந்து அவற்றைத் தம் வாழ்க்கையிலே திரிகரண சுத்தி யோடு பின்பற்றலாயினர்.

நாவலர் அவர்களின் கல்விப் பணிகள்:

நாவலர் அவர்களின் கல்விப் பணிகள் மூன்று வகையாகப் பிரித்து அறிய வேண்டியவை. ஒன்று ஆசிரியப் பணி, இரண்டாவது நூலாசிரியப் பணி, மூன்றாவது பாடசாலைகள் நிறுவிய பணி ஆகும்.

நாவலர் அவர்கள் சிறந்த ஆசிரியர். இவரின் ஆசிரியப் பணி இன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரி என வழங்கும் பேர்சிவல் பாடசாலையிலே தொடங்கிற்று. பாடசாலையிற் கற்பித்ததோடு அமையாது, மாலை வேளைகளிலே தம்மை நாடி வந்த பலருக்கும் சமய சாத்திரங்கள், இலக்கிய இலக்கணங்கள் ஆகியவற்றை அவர் கற்பித்து வந்தார். நாவலரின் பெருமகனுரான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை பெருமகனுராகிய ஸ்ரீமத்-த-கைலாசபிள்ளை, காசிவாசி செந்திநாதையர் முதலானோர் நாவலரவர்களின் மாணுக்கரிற் குறிப்பிடத் தகுந்தோர்-

[ வளர்ச்சி 2 ஆம் பக்கம் ]

## 28 ஆவது திருவாசக விழா

ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டத்தின் இடைவிடாத் தொண்டு

—0—

திருக்கேதீச்சரத் திருத்தலத்தை ஆண்டுதோறும் தரிசிக்கும் பாக்கியம் பெறுகின்றவர்கள் திருவாசக மடத்தின் சேவையையும் கதிர்காம விழாக்காலப் பாதயாத்திரைப் பணியையும் நோக்கத் தவறமாட்டார்கள்.

திருவாசக மட பரிபாலனம் சைவ சமயிகளுக்குப் பெருமை தருவது. மடங்களெல்லாம் மடங்கள் அல்ல என்று மக்கள் வாய் விட்டுக் குறை கூறுமிக் காலத்திலே திருவாசக மடத்தின் செம்மை சைவ மக்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது.

அடியார் வாழ்வு அனைவருக்கும் அமையாது. பற்றற்ற வாழ்வு என்று வாய்ப்பறை அறைகின்றவர்கள் போலாகாது இயன்ற அளவிலே வீண் பற்றை விடுத்து ஈசன்பாலும் திருத்தொண்டர்கள் இடத்தும் பற்று வைக்கின்றவர்களே சிவனடியார்களாவர். இத்தகைய உள்ளத் தூய்மையும் புறப் புனிதமும் ஒருங்கமைந்த சிவனடியார்கள் கூடிப் பணியாற்றும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் திருவாசக விழாவை ஒரு நியமமாகச் சமய நெறிச் சால அமைத்து அங்கு கூடும் அடியார்களின் ஆன்மிக மேம்பாட்டுக்கு வேண்டும் கைங்கரியங்களைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இந்தச் சாதக சூழ்நிலையின் சால்பு காரணமாக இங்கு கூடும் சிவனடியார்கள் யாவரும் இங்குநடைபெறும் திருவாசக விழாவினையும் கண்டு திருவருள் இன்பத்திலே திளைத்திருப்பார்கள் என்பதற் கையமில்லை,

இவ்வாண்டு திருவாசக விழா 12-12-83 தொடக்கம் 21-12-83 வரை நிகழ்ந்தது.

[ வளர்ச்சி 3 ஆம் பக்கம் ]

உ
சிவமயம்
"ஐந்தெழுத்தும் நீறும் சிவனடியாரும் வாழ்க"






ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம் முற்று ஓதல்

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்
(நீராவியடி.-யாழ்ப்பாணம்)

1-1-1984 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் மாலை வரையும்

அன்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்

திருவாதவூரடிகள் திருத்தாள் போற்றி

| | |
|---|---|
| ம. நமசிவாயம் | த. சண்முகலிங்கம் |
| சமயப்பிரசாரச் செலாளர் | கௌரவ காரியதரிசி |
| சைவபரிபாலனசபை, | சைவபரிபாலனசபை. |

## தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே!

[ திரு. முருக. வே. பரமநாதன் ]

(முன் வளர்ச்சி — 2)

பட்டும் பட்டாடையுமாய் அணிந்து, தங்கமும் வைரமும் நிறைந்துப் பொட்டும் பூவுமாய், ஒய்யார நடையுடன் பவனிவரும் இவ் வுடம்பை" மணிவாசகர் சோர்ந்தீ மொய்த்து அழுக்கொடு திரியும் சிறுகுடில் விறிலி நடைக் கூடம் என்றெல்லாம் வர்ணிக்கிருர்.

"ஐந்து பூதங் கூடுஞ் சுருங்கிலைச் சாலேகம் ஒன்பது
குலாவு நடைமனையை நாறும் வடக்கயிறு
வெண்ணரம்பா வென்பு
தசையினுன் மதவேள்விழா நடத்தவைக்கின்ற கைத்தேரை
வெண்ணீர், செநீர், கணீர், மலநீர், புனீர், இறைக்கும்
விடக்குத்துருத்தியைக் கருமருந்துக் கூட்டை
வெட்டவெட்டத் தளிர்க்கும் வேட்கைமரமுறுகின்ற
சுடுகாட்டை
முடிவிலேமெய்போலிருந்து பொய்யாகுஞ் சடக்கை"

என்றுதாயுமானுர்காட்டும்காமனுடையகைத்தேர்தான் இவ்வுடம்பு. இதன்னுள்ளே குடியிருந்துபார்த்தாற்ருன் தெரியும். இதன்முடைநாற்றம். இருமிகளும் பூச்சிபுழுக்களும் மலிந்துகிடக்கின்றன. எங்குபார்த்தாலும் ஒட்டையும ஓடிசலும் மயிர்க்கண் தோறும் வெயர்வை நாற்றம் ஓட்டை மாடத்தின் ஒன்பது வாயில்களும் எதிரும்புதிருமாய் இயங்குகின்றன கண்ணென்று காணகையொன்று செய்ய கருத்தொன்று நாடி ஒரே களேபரம்ஏ

[வளர்ச்சி 2 ம் பக்கம் ]

உ

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ராவினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

ருதிரோற்காரிஹூ கார்த்திகைமீ
2, 9; 16,23,30-12-83 வெள்ளி

# இந்துசாதனம்

## 'பொழியேல் மழை' என்று வழிபட்டோம்! — மாரி வளம் போதும் எனப் பொலிந்தது!

மார்கழி மாரி ஒரு பழைய கதையாகி விரட்சியே திரண்ட அநுபவம் இந் நாட்டுக்குச் சென்ற சில ஆண்டுகளாக இருந்தது. திருவெம்பாவைத் திருநாட்கள் அத்தனையும் மழை நீர் பரவிய வண்ணமாயின. அடியார்கள், '....... பொழியேல் மழை' ஏல் ஓரெம்பாவாய் என்று பாடும்பொழுதும் மழை பெய்து கொண்டிருந்தது. கார்த்திகை மார்கழிக் கால நிலை முன்னை நாட்கள்போல மறுபடியும் தோன்றியிருக்கின்றது, மித மிஞ்சி வெள்ளப் பெருக்கும் சூறவளித் துன்பமும் விளையும் அபாயமும் கூடவே காணப்படுகின்றது.

இந் நிலைமை இப்பொழுதுள்ள இன விவகாரத்துக்கும் அரசியல் வேற்றுமைக்கும் அறிகுறியாக அமைகின்றது போலும்.

காற்றடித்து வெளிக்கின்ற தன்மையும் மழை பொழிந்து ஓய்ந்து வெயில் விளங்கும் பான்மையும் எப்படியோ அப்படியே பாதகமும் அதன் பின் சாதகமும் ஆன மலர்ச்சிக் கிடமுண்டெனலாம்.

'தூற்றிக் கொள்வது காற்றுள்ளபோதே' யென்பர். சமரசப் பேச்சென்னும் காற்று பல திக்குகளிலும் வீசிக் கச்சான், கொண்டல், வாடையெல்லாமாய்ச் சேரளகம் தோன்றுவதுபோல நல்லெண்ணத் தென்றலுருவாகும் வாய்ப்புளதெனலாம்.

அல்லோரல கல்லோரல மரன அவனியிலே நல்லோரும் இருக்கின்றார்கள். நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் மழை பொழியுமென்பது உலக வழக்கு.

தமிழ் மக்கள் தகைமை மிக்கவர்கள். சால்பு சான்றவர்கள். இலக்கிய இலக்கண வளமுளமொழிவாய்ப் புடையவர்கள். இலட்சிய புருடர்களான பலரின் வரலாறு, முன்னோர் அளித்த பொன்னனைய களஞ்சியம் பேறுள்ளவர்கள், இன்னவர் சார்பாகப் பேசவும் செயலாற்றவும் கடமை பூண்டவர்கள் இவற்றையெல்லாம் இதயத்திற் கொண்டு வழுவகற்றி வளமியற்ற வகை செய்ய இறைவன் இன்னருள் புரிவாராக.

# சங்குப்பிட்டிப் பாதையும் பிரயாணிகள் பிரச்சினையும்

—o—

## சமூகசேவை உபதேசம் செய்வோர் சிந்தனைக்கெடுப்பார்களா?

(முன் வளர்ச்சி - 2)

கரையேறி விட்டாற் போதுமா — காத்திருக்கின்றது அடுத்த தாக்கம். இலங்கைப் போக்குவரத்துச் சபை. ஏங்கி நிற்கும் பயணக்காரருக்கு நெஞ்சிடியைக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். பேருந்து வண்டி வருமா? வருமா! என்ற சந்தேகம் கிலவும். கார்த்திகைப் பிறை கண்டதுபோல வண்டி தோற்றினாலும் புறப்படுமா என்று மேலும்ஐயம். விருப்பமில்லாமல் இயங்குவது போலப் புறப்பட்டாலும் பிரயாணிகள் ஒரு நாட் பொழுதை இந்தவிதமாகக் கழித்துப் பெரும்பாடு பட்டே சேர வேண்டிய இடத்துக்குப் போக முடியும்.

சங்குப் பிட்டிக்கும் மன்னாருக்கும் 45 கல் தொலைவு நடந்து போனாலும் 9 மணித்தியாலங்கள் போதும். காத்து நிற்கும் நேரமும் வண்டி ஓடி முடியும் நேரமுமாகப் பத்து மணித்தியாலங்கள்செலவாகின்றன — என்ன விபரீதம்!

தொழில் செய்பவர்கள் மனச் சான்றுடன் இயங்கினால் இந்தப் பயணம் எவ்வளவு சுபைமானது. மூன்

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலக்கண இலக்கியக் கடலான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரும் நாவலரவர்களிடத்தே, தம் ஐயங்களைத் தீர்த்துக்கொண்டவரேயாவர். இவர்கள் தமக்கென நல்லதொரு மாணாக்க பரம்பரையை உண்டாக்கியும், சிறந்த சமய, இலக்கிய இலக்கண நூல்களை எழுதியும் சைவத்தையும், தமிழையும் காத்தனர். நாவலரவர்களின் மாணாக்கர்பரம்பரையின் கடைசிக் கொழுந்துகளாக, ஆன்மிகத்துறையிலே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் தமிழ் இலக்கியத் துறையிலே புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை அவர்களும் இன்றுவரை விளங்கிவருகின்றனர். நாவலர் அவர்கள் ஆங்கிலத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தமிழை ஆங்கிலப்படுத்துவதிலும் சமர்த்தராக விளங்கினார். இவரது புலமையைக் கண்ட பாதிரிமார் தமது பாடசாலையிலேயே ஆசிரிய பதவி அளித்ததுடன், அவரைத் தம் குருவாகவும் மதித்து நடந்தார். பாதிரியார் வேண்டுகோளின்படி பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார் இவரது மொழி பெயர்ப்பே சிறந்ததாகப் போற்றப் பெற்றது.

நாவலரின் நூலாசிரியத் தொண்டு ஈடிணையற்றது அவர் 'வசன நடை கைவந்த வல்லாளர்'' என்று போற்றப்பட்டிருந்தார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காலத்தில் தமிழ், சைவநூல்கள் எல்லாம் செய்யுள் வடிவத்தில் ஏடுகளிலே எழுதிவைக்கப்பட்டிருந்தன. இவற்றையெல்லாம புத்தகருபத்தில் வெளியிட்டு உலகிற்கும் பயன்படச் செய்யவேண்டுமென எண்ணி இதற்காக அச்சகம் நிறுவுவதற்குச் சென்னைக்குச் சென்று அச்சுப் பொருட்களைப் பெற்று ''வித்தியானுபாலன அச்சியந்திரசாலை'' என்ற பெயருடன் முதலில் யாழ்ப்பாணத்து நல்லூரில் 1849இல் நிறுவினார். பின்பு அதனை வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலைக்குப் பக்கத்தில் கொண்டுவந்து நடத்தினார், அதன் பின்னர் தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவாக சென்னைக்குக் கொண்டு சென்றார். இன்றும் அவ்வச்சியந்திரசாலை நாவலர் நூல்களை வெளியிட்டு வருகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களால் அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்ட நூல்கள்பல அவை யாவன சூடாமணிநிகண்டுரை சௌந்தயலகரியுரை முதற்பாலபாடம் இரண்டாம் பாலபாடம் பெரியபுராணவசனம் நன்னூல்விருத்தியுரை திருமுருகாற்றுப்படையுரை திருச் செந்திநிரோட்டகயமகவந்தாதியுரை சிவாலயதரிசனவிதி சைவதூஷணபரிகாரம் குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் கந்தரலங்காரம் கந்தரனுபூதி ஏரெழுபது திருக்கைவழக்கம் புட்பவிதி மறை

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

உ

## திருமந்திரத்தில் வரும் சிந்தனை

(இறை ஒளி)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கூப்பிக் குவலயத்தோர்
எல்லாருங் கைதொழும் என்றபொய் யாமொழி ஏதெனவே
போல்லாப் புலைமை புரிவோர் நரகம் புகுவரெனச்
சொல்லார் திருமூலர் சுட்டினர் தூய்மை துலங்கிடவே!

வாதுசெய் தென்னே மனிதர் பெறுவர் மதியிலர்தம்
போதுநில் லாதது போவது கண்டும் மூலனுரை
யாதுபின் நோக்கெனில் ஈசன் இணையடி ஏத்தியென்றும்
நீதியுள் நின்றன்பு நீளும் அறிவு நிகழ்த்து தலை

இட்டார் இடாதார் இரண்டே எனச்சாதி எல்லைவகுத்
திட்டார் கிழவியார் யார்க்கு மிடுமின் எவரெனுதே
இட்டா வினுக்கிலை ஈசனுக் கோர்பத் திரமெனவே
இட்டார் திருமந் திரம்மூலர் யோகத் திருந்துணர்ந்தே

எள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரெனக் காட்டியவர்
உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம் ஒன்றுமெனத்
தெள்ளுண்மை நன்கு செறியத் திருமூலர் தெற்றுரைத்தார்
எள் உள் நெய் போல்விடம் என்றம மதுவில் இருந்ததமே

மூலன் செய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
ஞாலம் என்பது நயந்தோர் மாட்டெனுஞ்
சீலம் தெளிந்திடத் தெளிந்துரைப் பேனே.

தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே
முன்னை முன்னோனும் மூலனை ஆக்கினன்
என்னை இதன்பொருள்! இறைவற் கருச்சனை
கன்னி மொழித்தமிழ்க் கவிதை தானே

தான்பெற்ற இன்பம் தரணியும் பெறுகென
நோன்பேற்று நின்று நுவன்றனன் மூலனும்
தேன்பொதுது கணணித திருமந் திரவதை
யான்பற்றி யெடுக்க யாத்தனன் கவியே

புந்தியில் வைத்தடி போற்றிடும் நெறியினை
மந்திரம் வகுத்த அவ் வண்ணமி யாதெனின்
ஐந்து கரத்தன் ஓங்கார உருவம்
சிந்தை அமைத்திடிற் சேர்வது ஞானமே.

ஒன்றவன் ருனே யுணர்க பரம்பொருள்
என்றதன் இயல்பின இறைவனோ டிரண்டாய்
நின்றிடு பதிபசு பாசமுந் நெறியாய்
நன்றுரை மறைகள் நான்கெனல் ஆமே

எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமெனச்
செப்பிய மூலன் செழுந்தமிழ்ச் சீரே
இப்பொழு தியானும் எடுத்துரைப் பேனே

அன்பொடு உருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதென
முன்பு மொழிந்தஅம் மூலன் முறைநெறி
இன்பம் இயைந்திடும் எழில்வகுப் பேனே

பூதங்கள் ஐந்தினப் புறங்கடை ஒன்று
பேதங்கள் ஆறுஅகம் புறமெனப் போந்தே
ஓதும்ஏழ் உணர்வு நிலையதைக் கடந்து
போதும் எட் டெனுமப்பா லுக்கப் பாலே

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகம
எண்ணை இயைந்தே தியபினன் முறையும்
கண்ணுதல் லையே கன்னித் தமிழொடு
ஒண்பொருள் வடசொல் உணர்ந்திடும் ஒருங்கே

(வளரும்)

## 25 ஆவது ........

[1 ஆம் பக்கத்து வளர்ச்சி]

இவ் விழாவிலே பெரும் பயன் அளிக்கும் நிகழ்ச்சி சிவபூசைமாநாடு (19-12-83 சிவபூசா துரந்தார்கள் எத்தனை என்று எண்ணும் பொழுது இந்த உத்தம நெறி நிற்பவர்கள் மிகச் சிலரே என்ற உண்மை புலப்படும். எனினும் இவர்களாவது சிவபூசையின் திருவினை எடுத்து ஏனையோர் அறிய வைக்கும் அருந் தொண்டினை ஆற்றுகின்றார்களேயெனக் கருத வேண்டும், ஏனைய விழாக்களைப் போலல்லாமல் சரியை, கிரியை, யோகம் எனும் மூவழியிலும் பொழுதினை ஒரு நாளுக்காவது தவப்பொழுதாக வைக்கும் விழா இது என்பது குறிப்பிடத் தக்கது.

---

### யாழ். வண்ணார்பண்ணை பிரம்மஸ்ரீ தி. இரத்தினசபாபதிக் குருக்கள்

அந்தணர்களுக்குரிய அணி இலக்கணம் யாவும் அமைந்த பெருந்தகையாளர் பிரம்மஸ்ரீ தி.இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்கள் முப்பொழுதும் திருமேனி தீண்டும் தகைமை, முனிவர் வகுத்த முதல் நூல் கற்றுப் பின்னோர் விரிவுரை பயின்று பௌராணிகராய்ப், பண்டிதராய் ஞானவிளைவு பெறுபவருக்கே பொருத்தமானது. அரன் பூசைக்கு ஐந்து பொருள் அளிக்கும் ஆவினைப் பேணுவது அந்தணர்தம் கடமை என்பதை உணர்ந்து அவ் வழி செயலாற்றிய செம்மலின் மறைவு சைவ உலகுக்குத் தாங்கொணாத் தாக்கமாகும்.

---

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ..!.

2 - ஆம் பக்கத்து வளர்ச்சி

சையந்தாதி கோயிற் புராண மூலம் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி சிதம்பர மும்மணிக் கோவை உபநிடதவுரை பட்டணத்துப் பிள்ளையார்பாடல் அருணகிரிநாதர் வகுப்பு சைவவினாவிடை முதற்புத்தகம் மருந்தூரந்தாதியுரை திருச்செந்தூரகவல் விநாயககவசம் சிவகவசம் சக்திகவசம் திருவள்ளுவர் பரிமேலழகருரை திருச்சிற்றம் பலக்கோவையுரை சேதுபுராணம் பிரயோக விவேகவுரை தருக்கசங்கிரகம் உபமானசங்கிரகம் இரத்தினச்சுருக்கம் இலக்கணக் கொத்து தொல்காப்பியச் சூத்திரவிருத்தி இலக்க விளக்கச் சூறாவளி கந்தபுராணம் பதினோராந்திரு முறை மூன்றும்பாலபாடம் நால்வர்நான்மணிமாலை கோயிற்புராணவுரை சைவசமயநெறியுரை தொல்காப்பியச்சொல்லதிகாரஞ் சேனாவரையருரை இலக்கணச் சுருக்கம் சைவவினாவிடை இரண்டாம் புத்தகம் யாழ்ப்பாணச் சமயநிலை இலக்கண வினாவிடைஇரண்டாம் புத்தகம் இலங்கைப் பூமிசாத்திரம் நன்நூற்காண்டிகையுரை சிதம்பரமான்மியம் பெரியபுராணசூசனம் கந்தபுராணவசனம் திருவிளையாடற் புராணவசனம் திருவிளையாடற்புராணம் சிவராத்திரிபுராணம் சிவஞானபோதச்சிற்றுரை குருசிஷ்யக்கிரமம் நன்னூல்விருத்தியுரை சம்பதிப்பு காண்டிகையுரைஎன்பனவும் அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டுஎழுதத்தொடங்கியவைகள் தேவாரம் அகராதி (தமிழ்) அகராதி (சம்ஸ்கிருதம் தமிழ்)

அகராதி (இங்கிலிஷ் தமிழ்) பரிபாஷை இரகுவம்சம் உபதேசகாண்டம் இலக்கணவினாவிடைமுதற்புத்தகம் சம்ஸ்கிருதவுபகரணசாரம் என்பனவாகும்

நாவலர் அவர்கள் எழுதிய திருவிளையாடற் புராணவசனம் பெரியபுராண வசனம் முதலாம் இரண்டாம் பாலபாடங்கள் பெரியபுராண சூசனம் ஆகியன தலைசிறந்த வசனநூலாகும். அவ்வப்பொழுது அவரெழுதிவெளியிட்ட கண்டனப்பிரசுரங்கள் ஆறுமுநாவலர்பிரபந்தத்திரட்டு என்னும்பெயரில்தொகுப்பு நூலாக அமைந்துவந்துள்ளது சைவசமயஉண்மைகளை எளியமுறையிலேமாணுக்கர் அறிவதற்காகச் சைவவினாவிடை என்றநூலை இரண்டுபாகம் வெளியிட்டார் இவற்றுடன் கோயிற்புராணம் சைவசமயநெறி ஆகியநூல்களிற்குச்சிறந்தஉரையும் எழுதியுள்ளார்தமிழ்இலக்கணம்கற்போருக்குக் கைநூல்களாகப் பயன்படுத்தக்க வகையில் இலக்கணச் சுருக்கம் இலக்கணவினாவிடை ஆகியனவும் இவரால்எழுதிவெளியிடப்பட்டன நன்னூற்காண்டிகையுரையைநன்முறையில் வெளியிட்டு மேலதிக இலக்கண அறிவைவேண்டுவோர்க்கும் உறுதுணைபுரிந்துள்ளார்திருமுருகாற்றுப்படைக்கு அவர் உரைஎழுதியுள்ளார் இதுவேஅவர் முதலில் எழுதிவெளியிட்ட உரைநூலாகும் திருக்குறள் பரிமேலழகர்உரை தொல்காப்பியம் சேனாவரையம்முதலிய நூல்களைப் பதிப்பித்தவகையில் நாவலரின்பதிப்பாசிரியத் தன்மைநன்கு புலனாகின்றது இவைஎல்லாம் நாவலரின்கல்விசீர்மையான சைவத்தொண்டுக்கும் தமிழ்த் தொண்டுக்கும் எடுத்துக்காட்டுகளாகும்

சைவசமயபிள்ளைகளைச்சைவச்சூழலில்வளர்க்கவும் சைவசமய உண்மைகளை அவர்களுக்கு உணர்த்தவும்ஊர்களைதோற்றும் சைவத் தமிழ்ப்பாடசாலைகளைநிறுவி தமிழையும் சைவசமயத்தையும் வளர்க்கஉறுதிகொண்டார்இந்நோக்கத்தினை நிறைவேற்றநாவலர் அவர்கள் முதன்முதலாக வண்ணார்பண்ணையில் 1848 ஆம்ஆண்டிலும் சிதம்பரத்தில் 1864 ஆம் ஆண்டிலும் இருசைவப்பிரகாசவித்தியாசாலைகளைத் தாபித்தார் இப்பாடசாலையினைத்தாமும் தம்மாணாக்கருமாகநடாத்தி வந்தனர் (வளரும்)

---

## சங்குப்பிட்டி.....

2ம் பக்கத்து வளர்ச்சி )

று மணித்தியாலங்களுக்குள் கேரதீவுக் கரையிலிருந்து மன்னாரை அடைந்து விடலாம்.

### கண்ணொடு கண் நோக்கும் காட்சி

இனி மன்னார் இ. போ. ச. வின் இயக்கம்! மழை பெய்யுமா என்று தானும் குறிப்பாக அநுமானித்து விடலாம்; ஆனால் மன்னார் சங்குப்பிட்டிச் சேவை ஒருவராலும் அநுமானிக்க முடியாது!

சிறிய உந்து வண்டியின் உதவி பெரிது. ஆனாலும் அதுவும் புறப்பட எடுக்கும் நேரம் உபத்திரம் உண்டு பண்ணுமளவுக்கு இழுபறியே.

சமூக நலத் தொண்டு சாற்றும் பெரியோர்களே இந்த நிலைமை யாரால் எழுகின்றது? எங்கள் நலம் பேண இயங்குகின்றோம் என்றால் இந்தச் சேவை செவ்வையாக நடைபெற முடியாதா?

### இ.போ.ச, யாருக்காக?

யாருக்காக என்று வசந்த மாளிகைத் திரைப் படத்தில் வரும் பாட்டு நினைவுக்கு வருகின்றது. இ. போ. ச; யாருக்காக? ஏன் இது சொண்டிபாக்கின்றது.

கேரதீவுக்கும் மன்னாருக்கும் இடையிலே பயணம் செய்பவர்களுள் அதிகமானவர்கள் சமக்காரர்கள் - விவசாயிகள், தொழிலாளர்கள், யாத்திரை செய்வோர் பெரும்பாலார். இவர்களுக்கு இடைஞ்சல் என்றால் அது சமூகத்துக்குத் தானன்றோ!

பூநகரி, பல்லவராயர் கட்டு, வெள்ளாங்குளம், கிராஞ்சி, பொன்னாவெளி, ஆத்திமோட்டை, முழங்காவில், இலுப்பைக்கடவை விடத்தல்தீவு, இவ்விடங்களிலே பயிரிடுவோரைப் பாதுகாப்பது சமூகத்தின் கடமையல்லவா? விவசாயத்தால் விளைவு சமூகத்துக்கல்லவா பயன்?

விதிவழியே நின்று விவாதித்து வீண்பொழுது போக்கினால் சமூகத்தின் விதியென்ன? ஒவ்வொரு நாடிப் பொழுதும் தக்கவாறு உபயோகப்படுத்த ஒவ்வொருவரும் முற்படவேண்டியது மக்களின் கடமை. கடமை செய்யாது உரிமையைக் காத்திருப்பது இலவுகாத்த கிளியின் மகிமையை ஒக்குமல்லவா?

எனவே, சமூகமே! இனி யாவது செயற்பட எண்ணுவாய் எண்ணினால்:

### இறங்குதுறை ஆபத்து!

1 சங்குப்பிட்டி இறங்குதுறை ஆபத்து நிலையமில்லாது பயணஞ் செய்வோரைப் பாதுகாக்கும் துறையாகப் பயன் கொடுக்கும்.

2 கேரதீவு - மன்னார்ப் பயணம் தங்குதடையின்றி சமூக வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பயன்படக் கூடியதாய் அமையும்.

3 விவசாய விளைவு வேண்டியளவு விளங்கும்.

சமூகமே!
சற்று சிந்திப்பாயா?

---

## தருவாய் எனக்குன் திருவடி.......

[ 1 ஆம் பக்கத்து வளர்ச்சி ]

தோளெல்லாவற்றையுஞ் சகித்துச்சொண்டுமுடங்கத்தான் முடிகின்றதா அதுதான் இல்லையே ஐந்துபேர்கூடிக்கொண்டு அல்லும்பகலும்தொல்லைதான்கொடுக்கின்றார்கள் நித்திய நிம்மதிக் குறைவானவாழ்வு இவ்வளவுஇன்னல்களையும்மறைத்துபுறச்சுவர்தீற்றித்தோலினால்புறக்கோலஞ்செய்து விட்டார் இறைவன் இந்தமோசடியானவீட்டிற்குள் உயிர் உய்யுநெறி தெரியாமல் மனம்உடைந்து கருத்தழிந்து சதா அழுது கொண்டே இருக்கின்றது. எனவே மூலட்டானத்து ஈசா என்னால்வாழமுடியவில்லையேயென்று முறையிடுகின்றது உயிர் கால் கொடுத்தெலும்பு மூட்டிக் கதிர் நரம்பாக் கையார்த்துத் தோலுடுத்துதிரமாட்டி தொகுமயிர் பெய்தகூரைஒலெடுத்து மைஞர் கூடி யொளிப்பதற்கஞ்சுகின்றேன் என்றுஓய் விட்டலறுகின்றது பொய்யுடலை மெய்யென்று பெயரிட்டு எண்ணிறந்த நோய்களின் கொள்கலனுக்கி இந்த உயிரை வாட்டி வதைக்கும் படிக்கு ஆக்கிவிட்டஆண்டவனை வாழ்த்துவதா வைவதா அதுமட்டுமா ஐம்புலன்களாகிய முரடர்கள் ஒருபுறம் இவர்கள்உடைய சர்வாதிகார ஆட்சியில் நாம் படும் அவலங்கள் அம்மம்மா சொல்லுந்தரமன்று அதைத்தா இதைக் கொடு அது வேண்டாம் இது தான் வேண்டும் அதைத்தொடாதே இதை விடாதே என்றெல்லாம் அதட்டி ஏவல் கொள்கின்றன. இந்தச் சுதந்திரமில்லா வாழ்வினால் நலிந்து மெலிந்து தேய்ந்து

விடுகின்றது உயிர் இந்த அடக்குமுறைகளையெல்லாம் கண்ட அப்பரடிகள் ஐயையோ இங்கிருந்து பிழைக்கவழியில்லையே ஒளிவிசும் புனிதத் திருமேனிப் புண்ணியனே செப்பமே திகழும் மேனியை எப்பொழுது அடியேன் எய்துவனேயென்று ஏங்குகின்றார் ( வளரும் )

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில், ஈட்டு வழக்கு இலக்கம் : 16533.

1. கரணவாய் வடக்கு வைத்திலிங்கம் ஞானசவுந்திரமும்
2. மேற்படி, பெண் சரோஜினிதேவியும். வழக்காளிகள்

எதிராக.

1. கல்லுவம், சின்னத்துரை சின்னராசாவும்
2. மேற்படி பெண் இராசேஸ்வரியும். எதிராளிகள்

மேலே குறித்த வழக்கில் 1983ம் ஆண்டு ஆனி மாதம் 9ம் திகதி தீர்ந்த தீர்வைப் படியும், கோட்டாரால் எனக்கு அனுப்பப்பட்ட 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1ம் திகதி யிடப்பட்டு அனுப்பப்பட்ட கட்டளையின் படியும், இதன் கீழ் விபரிக்கப்படும் அசைவற்ற ஆதனம் 1984ம் ஆண்டு தை மாதம் 5ம் திகதி வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்துள் நின்று என்னால் விற்கப்படும்.

மேலே குறித்த எதிராளிகள், வழக்காளிகளுக்கு ரூபா 13, 461/= ம் மேலும் ரூபா 8975/= க்கு 1982 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 ந் திகதியிலிருந்து, 1983ம் ஆண்டு ஆனிமாதம் 9 ம் திகதிவரை 15% வீதமான வட்டியும், அதன் பின்னர் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப் படும் திகதி வரை 12% வட்டியும், வழக்குச் செலவு ரூபா 2455/= ம் கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டி யிறை" கரைத்திடல், நிலப்பரப்பு 29. இதில் அளவின் படி நிலப்பரப்பு 27. குளி 2. இதில் மேற்கே இருக்கும் கிணற்றுக்குத்தெற்குப்புறமாக நிலப்பரப்பு 7. நீக்கி, மிகுதி நிலப்பரப்பு 20. குளி 2. எல்லை கிழக்கு இளையதம்பி வேதவனத்துக்கும மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு பெரியதம்பி துரையப்பாவுக்கும் மறு பேருக்குமுடைய ஆதனம். மேற்கு துரையப்பா பெண் முத்தாச்சிப் பிள்ளைக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம் தெற்கு துரையப்பா பெண் முத்தாச்சிப்பிள்ளைக்குடைய வாதனம். இவ் வெல்லைக் குட்பட்டவை அடங்கலிற் சொரிவலாய் ஆறில் ஒரு பங்கும், முழுக்காணிக்குள் இருக்கும் கிணற்றிலும், தார்வை நிலத்திலும் இதற்குரிய பங்கும்:-

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை ரூபா இருபத்தொன்பதினாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும் (ரூபா. 29,950/=)

குறிப்பு:- எதிராளிகள்; காணியின் விற்பனவை நிற்பாட்டுவதாக இருந்தால் அதற்குரிய நீதிமன்றக்கட்டளையுடன் ஆணைபாளரின் செலவுத் தொகையும், அவரிடம் விற்பனவுத் திகதிக்கு முன்னர் கொடுக்க வேண்டும்.

கிரி ஒழுங்கை,
தும்பளை
பருத்தித்துறை
13-12-1983

ஆ. க. சதாசிவம்பிள்ளை,
மாவட்ட நீதிமன்ற
விற்பனவு ஆணையாளர்

**HINDU ORGAN**

Fri. 2, 9, 16, 23-12-83

## A SENSIBLE COURSE CAN SOLVE ANY PROBLEM

Now that the fact of a problem being outstanding and elusive, has been acknowledged by the Government of Sri Lanka, Tamils, whose cause is that problem, must make themselves ready to participate in talks that will lead to a sensible course in solving the vexed question.

Compromise is a term often used by mediators who earnestly endeavour to enable contending disputants arrive at a conclusive decision particularly when dead - locks frequently mar talks that are initiated by well-meaning interventients. Mutual concessions must necessarily be made. Such a settlement acquires merit; it can never be derogatory to any of the disputants.

The Tamil problem has rightly caught the imagination of all international statesmen; consequently a congenial climate in the political atmosphere has developed almost invitingly. That the chairwoman of the Commonwealth of Nations has been in the centre of activities is a promising factor. The rounds of talks that had taken place in the capital cities of Colombo and Delhi should be able to cause satisfactory results for the simple reason that a Colombo - Delhi axis is a natural central core of cultural growth in the Eastern World.

There is now visible a tide in the affairs of the Tamil Community which taken at the flood will certainly lead on, at the least, to fortuitous advantages. Where deep differences exist among communities or between two factions, efforts to bring about rapproachment must be genuine and based on good will. Diplomacy is dangerous if it is entirely artful; skill in managing inter - communal relations must not be concealed in deceitful intentions or devices

It must be borne in mind that the present state of chaotic conditions now prevailing all over the country uprooting the chords of ancient civilizations is a matter of concern for the entirety of mankind. Humanity, if it should survive, must be protected by the noblest of endeavours. Mental reservations are veritable tumors that eventually lead to cancerous growth Such malignancy would be very virulent gathering momentum and taking deep root. Then, no combination of skills can succeed in demolishing it

Even the depression in the Bay of Bengal has resolved itself and the threats of the cyclonic development have vanished. Here is just the time, the dawn of Utharayana will, as the proverb goes, lead on to a distinct development in the affairs of all of us bringing solace and satisfaction to the aggrieved. Shall we not make hay while the Utarayana Sun begins to shine.

# Nutrition For VEGETARIANS

### The HINDU Meaning of Food

Nutritional awareness has always been an important part of the Hindu heritage. Hindus have always believed in food habits conducive to good health and longevity. The Taitiriya Upanishad says "From food.......creatures that dwell on earth are produced; ... by food they live .... into it they finally pass... Truly, food is the chief of all beings; therefore it is called a panacea" Thus, the scriptures teach us that food is life itself.

The human body is made up of the food we take in it; even the mind is food in a very fine form Thus, our food influences every one of our activities including our thinking. Lately Western science is reflecting this concept "We are what we eat" we are being told.

For Hindus, daily life is closely tied to religious beliefs and teachings. Food is considered so sacred that even a grain of rice dropped on the floor is picked up. The Vedas say that one should worship food, for it enables the use of all the faculties -- and through (proper) food comes the end of all ignorance.

Foods are thought to produce certain changes in people. These changes are classified under three gunas - satva, rajas and tamas - which are present in varying degrees in all objects. gross and subtle, including the mind intellect and ego. Satva guna makes one religious compassionate and prone to good conduct. Rajas guna makes one active, hardworking, courageous and endurant. Tamas guna makes one indolent and prone to criminal behaviour. Satvic foods such as milk and fruits, are eaten by ascetics, since they promote spiritual growth and good character Rajasic food, such as meat creates attachment and gives strength to warriors Tamasic food, such as garlic in combination with other herbs and spices, is thought to produce laziness, but is considered benificial in special cases such as for lactating women.

The Hindu religion has traditionally taught the designing of diets based on needs, but generally following a predominance of satvic foods and minimizing rajasic and tamasic foods. This would make for spiritual growth in individuals; so that society would exist harmoniously, without the evils of crime quarrels, legislation etc.

Sri Susrutha, the "father of Hindu medicin" wrote a treatise on medicine in 600 B. C; known as Susrutha Samhitha. This dealt with the causes of diseases and their treatment, modes of surgery, nutrition etc. He postulated that the human body was controlled by three systems "vayu" the nervous system, "pitham", the digestive system, and "khapam", the excretory system (including lungs, kidneys, skin etc.) As noted in the Kural, these three systems, working in balance, keep the body free from diseases. By examining the pulse, a doctor or an experienced elder could easily determine which of the three systems was not working normally and prescribe a remidical diet to bring the systems back into balance again. Thus a simple, timely and effective system of health maintenance was in existence thousands of years ago, without the drawbacks of side - effects of drugs in most cases. This was used almost continually in daily life, allowing for corrective action to be taken as early as the next meal, after the onset of the earliest symptoms. The Holy Kural tells us: "No medicine is necessary if the right food is taken after considering how the previous meal has been digested" (verse 942)

Seen from the Hindu perspective, food becomes part and parcel of the overall system of body, mind, spiritual development and society. This sophisticated way of dealing with the body, food and medicine has generally persisted up to the present, although technological and foreign influences (such as taking stimulants like coffee, processed "convenience" foods, etc.) have eroded beliefs in those values,

Courtesy:- The New Saivaite World)

# A Ganesha puja

## Order of worship

### Deepa Sthapana

To begin one should prepare for the puja by lighting a small lamp which is kept to the side of the Deity. This is known as Deepa Sathapana or "establishing the light". Lighting a lamp lets the devas in the Second World know that a puja is about to be performed. Next offer a pinch of kumkum to the flame by placing it on the base of the lamp holder with the ring finger of the right hand. Then offer a flower by placing it also on the lamp base. This optional Sanskrit prayer may be chanted during the Deepa Sthapana.

Deepa Sthapana Muhurthaha Sumuhurtho Asthu "Let the establishing of this light at this time be the best time".

### 2 Achamana

Achamana means 'water sipping'. It is a purificatory rite in which one prepares the mind for the puja. Take a spoon of water from the kamandalu with the left hand, stretch out the right hand and put a few drops of water in the center of the palm. Bring the hand up to the lips and sip the water. Before sipping the water the first time say: Om Sumukhaya Svaha!

"Om, One who is Pleasant Faced, I consume this" Repeat the process a second time and just before sipping the water chant: "Om Ekadantaya Svaha"

"Om, He Who has one tusk, I consume this!" Then for the third time chant: Om Gajakarnikaya Svaha!

"Om, One Who has the elephant ears, I consume this!" The object of this rite is to infuse the mind with each sip of water with the particular aspect of Ganesha that is chanted. By doing so the mind becomes purified of other thoughts and concern that would distract it from the puja.

### 3 Dhayana

Next is dhyana, or 'meditating' on Ganesha while the following Sanskrit prayer is chanted:

Om Suklambaradharam
Vishnum
Sasivarnam Chatur-
bhujam
Prasanna Vadanam
Dhyayet
Sarva Vighopashantaye

Om: Attired in white
and all pervading,

Oh moon-hued,
four - shouldered One
With smiling face
so pleasing
Upon Thee we meditaate
for removing all obstacles.

Now adorn the Deity's forehead with Vibhuti,

(To be continued)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna. (Telephone: No. 22356) on Friday, 2, 9, 16, 23-12-83*

Editor in Chief:
R. N. Sivapirakasam